செ.வெ.எண்: 03 நாள்: 02.11.2016

# <u>பத்திரிகைச்செய்தி</u>

## <u>"ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டம்"</u>

புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து அரசுத் துறைகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களின் ஓய்வூதியப் பலன்கள் தொடர்பான குறைகளை கேட்டறிந்து தீர்வு காணும் வகையில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் **24.11.2016** வியாழக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மற்றும் சென்னை ஓய்வூதிய இயக்குனர் அவர்கள் முன்னிலையில் **"ஓய்வூதியர் குறைதீர்க்கும் கூட்டம்"** நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக ஓய்வூதியப் பலன்கள் குறித்து குறைகள் ஏதேனும் இருப்பின், மனு செய்ய விரும்புவோர் கீழ்காணும் படிவத்தில் தெளிவாக எழுதி அதனை தவறாமல் இரட்டைப்பிரதிகளில் எதிர்வரும் **10.11.2016** ஆம் தேதிக்குள் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்குக் கிடைக்குமாறு அனுப்பி வைத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**"ஓய்வூதியர்கள் குறைதீர்க்கும் கூட்டம் - 24.11.2016 "**
**கோரிக்கை படிவம்**

(தவறாமல் கீழ்காணும் அனைத்து விவரங்கள் பூர்த்திசெய்யப்படவேண்டும்)

1. மனுதாரார் பெயர் மற்றும் முகவரி :
2. அரசு அலுவலர் பெயர் :
3. அரசு அலுவலர் கடைசியாக பணிபுரிந்த
   பதவி மற்றும் அலுவலகம் :
4. அரசு அலுவலர் ஓய்வு பெற்ற / இறந்த தேதி :
5. தீர்வு செய்ய வேண்டிய கோரிக்கையின் விவரம் :
6. இதற்கு முன் மனு செய்திருந்தால் அதன்விபரம் :
7. எந்த அரசு அலுவலரால் கோரிக்கை தீர்வு
   செய்யபட வேண்டும் :

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**